# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2012 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, பிய தசுன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2012, ஓகத்து மாதம் 10 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.25** **தபாற் செலவு : ரூபா 10.00**

## *2012 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, பிய தசுன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

[*2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 6 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ.(கூட்) 21/2011*

### *பிய தசுன மன்றத்தினைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்*

*முன்னுரை.*

*" பிய தசுன மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவது மான கழகம் ஒன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க அதன் குறிக்கோள்களைப் பயனுற நிறைவேற்றும் மற்றும் சொல்லப்பட்ட மன்றத்தோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்கென இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட் டுள்ளதாதலாலும் :*

*அத்துடன், சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் அமைத்துரு வாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களை யும் இதுவரை அது வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அத்துடன் அது கூட்டிணைக் கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காக விருக்குமாதலாலும் :*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயர்.*

***1.*** *இச்சட்டம், 2012 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, பிய தசுன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*பிய தசுன மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

***2.*** *இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பிய தசுன மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர் களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) " பிய தசுன மன்றம்" எனும் பெயர்கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியு ரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத்*

2-PL 006104 -990 (2011/06)

தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம் ; பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன் படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்து வமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3.** (1) கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :-

(அ) நாட்டின் அபிவிருத்திக்காக இலங்கையிலுள்ள இளம் ஆட்களின் உச்சளவினவான, மிகச் சிறந்த சேவைகளைப் பெறும் நோக்குடன், அவர்களின் உயர்தொழிற்சார் மற்றும் வாழ்க்கைத்தொழிற்சார் தேர்ச்சிகளைச் சீராக்குவதற்கு அவர்களுக்கு அவசிய மான கல்வி, பயிற்சி மற்றும் உதவி என்பனவற்றை வழங்குதல் ;

(ஆ) இலங்கையிலுள்ள எல்லாச் சமுதாயத்தினருக்குகிடை யேயும் மக்களிடையேயும் சமாதானத்தையும் நல்லிணக் கத்தையும், சுமுகத்தையும் மேம்படுத்துதல் ;

(இ) இலங்கையிலுள்ள தேவையுள்ளோரும், அருகதையுள் ளோருமான மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்களை யும் ஏழையுதவிப்பரிசில்களையும் வழங்குதல் ;

(ஈ) விசேடமாக மாணவர்களின் நன்மைக்காக, பிரதான மாக நெடுந்தொலைவிலுள்ள மற்றும் குறைந்த அபிவிருத்தியடைந்துள்ள இடப்பரப்புகளில் நிரந்தர மான, நடமாடும் நூலகங்களைத் தாபித்தலும் பேணு தலும் ;

(உ) இலங்கையரிடையே அடிப்படை மனித உரிமைகள், சனநாயகம், நல்லாட்சி மற்றும் பல் பதவியாண்மை போன்ற அத்தகைய கருத்துக்களை மேம்படுத்தும் நோக்குடன் அத்தகைய கருத்துக்கள் பற்றி விழிப் புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்துதல் ;

(ஊ) பிள்ளைகள், பெண்கள் மற்றும் மாற்றுத்திறனுடைய ஆட்கள் போன்ற ஏனைய ஓரங்கட்டப்பட்ட தொகுதியினர் என்போரின் உரிமைகளை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் ;

(எ) பிள்ளைகளினதும் இளம் ஆட்களினதும் செயல் திறன்களுக்கும் அக்கறைக்கும் இணங்க அவர்களுக்கிடையேயான விளையாட்டுக்களுக்காக ஆதரவளித்தலும் அவற்றை மேம்படுத்துதலும் ;

(ஏ) புலம்பெயர்ந்த ஆட்களுட்பட, தேவையுள்ளோரும் அருகதையுள்ளோருமான இலங்கையருக்கு வீடமைப்பு, மருத்துவ நிவாரண மற்றும் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற பல்வேறு மனிதாபிமான உதவி நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் ;

(ஐ) இலங்கையிலுள்ள இளம் ஆட்களின் ஒழுக்க விழுமியங்களைச் சீராக்குவதற்கும் இலங்கையின் கலாசார மரபுரிமையை மேம்படுத்துவதற்கும் பல்வேறு கருத்திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் ; அத்துடன்

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடைய ஏனைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைதலும் ஒருங்கிணைதலும்.

(2) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைச் செயற்படுத்தலானது, இனம், மதம், மொழி, சாதி, பால் அல்லது அரசியல் அபிப்பிராயம் என்பவற்றின் அடிப்படையிலான ஏதேனும் வேறுபாடின்றி நிறைவேற்றப்படுவதனைக் கூட்டுத்தாபனம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் ஏதேனும் அமைச்சு முதலியவற்றுடனான வேலையுடன் முரண்படா திருப்பதனை உறுதிப்படுத்துதல்.

**4**. கூட்டுத்தாபனம், கூட்டுத்தாபனத்தின் பணிக்கும் ஏதேனும் அமைச்சினால் அல்லது அரசாங்கத் திணைக்களத்தினால் அல்லது ஒரு மாகாண சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஏதேனும் பணிக்குமிடையே ஏதேனும் முரண்பாட்டை ஏற்படுத்தாத அத்தகைய முறையில் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துதலும் மேற்கொள்ளுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**5**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, பின்வரும் தத்துவங்களுட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக் கூடிய காணிகளை அல்லது கட்டடங்களைக் கொள்வனவு செய்தல், கொள்ளுதல், வாடகைக்கெடுத்தல், நிர்மாணித்தல், புனரமைத்தல் மற்றும் வேறுவகையாகப் பெறுதல்;

(ஆ) பிணைப்பொறுப்புகளுடனோ பிணைப்பொறுப்புகளின்றியோ நிதிகளைக் கடனாகப் பெறுதலும் அல்லது திரட்டுதலும் காசாகவோ பொருளாகவோ மானியக் கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுதலும் ;

ஆயினும் கூட்டுத்தாபனம் எல்லா வெளிநாட்டு மானியக் கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும் நிதி என்னும் விடயம் குறித்தொதுக்கப்பெற்ற அமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்.

(இ) நாணய மாற்றுண்டியல்கள், காசோலைகளை, வாக்குறுதிப்பத்திரங்களை மற்றும் ஏனைய கைமாற்றத்தகு சாதனங்களைத் தயாரித்தலும், வரைதலும், ஏற்றுக்

கொள்ளுதலும், கழிப்பனவு செய்தலும், புறக்குறிப்பிடுதலும், மாற்றிக்கொடுத்தலும், வாங்குதலும், விற்பனைசெய்தலும், வழங்குதலும் மற்றும் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தலும், தொழிற்படுத்துதலும் , பேணுதலும், மூடுதலும் ;

(ஈ) இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள எவையேனும் அரசாங்க அல்லது அரசாங்கஞ்சாரா ஒழுங்கமைப்புடன் அல்லது வேறெவரேனும் ஆளுடன் அல்லது வேறேதேனும் நிறுவனத்துடன் ஒப்பந்தங்களை, பங்காண்மைகளை அல்லது உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதல் ;

(உ) நிறைவேற்றுக்குழு தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில், கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை முதலீடு செய்தல் ;

(ஊ) கூட்டுத்தாபன அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், பதவி நீக்குதலும், அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்துதலும் அவர்களின் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும், கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும், பணிக்கொடைகளையும் அவர்களுக்குச் செலுத்துதலும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஆளணியினருக்குப் பயிற்சியளித்தல் ; அத்துடன்

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முறையாகவும் பயனுள்ளவகையிலும் நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது உசிதமானவாறான வேறெல்லாக் காரியங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுக் குழு.

**6.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமைத்துவமும் நிர்வாகமும் கூட்டுத்தாபனத்தின் ஏற்பாடுகளுக்கமைய 7 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கை யினரான பதவி தாங்குநர்களைக் கொண்ட நிறைவேற்றுக் குழு வொன்றினால் நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

(2) நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களுள் ஒருவர் சமூக சேவைகள் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக் கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சினது சிரேஷ்ட துணைச் செயலாளரின் பதவிவரிசைக்குக் குறையாதவரும் அத்தகைய அமைச்சரால் நியமிக்கப்பட்டவருமான அலுவல ரொருவராதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுக்குழு ஒவ்வோராண்டும் கூட்டுத்தாபனத்தின் பொதுக் கூட்டமொன்றில் தெரிவு செய்யப் படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக்குழு இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஓராண்டிற்குள் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

(5) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கும் மன்றத்தின் நிறைவேற்றுக்குழு, கூட்டுத்தாப னத்தின் முதலாவது நிறைவேற்றுக் குழு சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் தெரிவு செய்யப்படும் வரை கூட்டுத் தாபனத்தின் நிறைவேற்றுக் குழுவாக செயலாற்றுதல் வேண்டும்.

(6) ஆளெவரும் அத்தகைய ஆளின் ஆயுள் காலத்திற்கு கூட்டுத் தாபனத்தின் பதவி தாங்குநர் ஒருவராக (போஷகர்கள் உட்பட) தெரிவு செய்யப்படுதலாகாது.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**7.** (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாத உறுப்பினர்களின் பெரும் பான்மையைக் கொண்டும் பின்வரும் எல்லாக் கருமங்களுக்

காகவும் அல்லது அவற்றுள் எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கஞ் செய்தல், உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்களை மீளப்பெறுதல், வெளியேற்றுதல் அல்லது அவர்கள் பதவி நீங்குதல் மற்றும் உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்கள் ;

(ஆ) நிறைவேற்றுக்குழுவின் பதவி தாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது அவர்கள் பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மற்றும் பதவிதாங்குநர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரை நியமித்தலும், அவர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும், அவர்களுக்கான நியதி நிபந்தனைகளும் ;

(ஈ) நிறைவேற்றுக்குழுவின், கூட்டுத்தாபனத்தின் அல்லது அதன் ஏதேனும் உபகுழுவின் கூட்டங்களை அழைப்பதற்கும் நடாத்துவதற்கும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையும் வெற்றிடங்களை நிரப்புதலும், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும் நிகழ்ச்சிநிரலும், கூட்ட நடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) நிறைவேற்றுக் குழுவினதும் கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பினர்களுக்கான தகைமைகளும் தகைமையீனங்களும் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காகக் கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படும் ஏதேனும் விதி, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டவொரு விதி என்றாற்போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதே முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அதற்கெதுவும் சேர்க்கப்பட லாம் அல்லது அது ஒழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபன விதிகளுக்கமைந் தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாப னத்தின் நிதியம்.

**8**. (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டி ருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்துக்காகவும் அதன் கணக்காலும், கொடை, இறுதிவிருப்பாவணக் கொடை, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக் கொடை என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும், நிறைவேற்றுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற் பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப் படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனமானது சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களை யும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்ற வாறான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**9**. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டா தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, கூட்டுத்தாபனத்தின் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அத்துடன் அதன் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமையதிபதியால் அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வளர் ஒருவரால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது -

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவிருந்து, கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவரான தனி ஆள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக விருந்து, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையதான கணக்காளர்கள் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

மன்றத்தினால் செலுத்தப்பட வேண்டியவையும் ஒழுங்கமைப்புக்குச் செலுத்தப்படற்பாலனவுமான தனிசுகள்.

**10**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்துக்கு உளதாயிருக்கும் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படுதற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருக் கலாம்.

**11**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபன மானது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையில் அதற்கு உரித்தாக்கப்படக் கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலு டையதும் இயலுமாதலும் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆதனம் யாவும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகவும் 7 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்க மையவும் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும் அத்துடன் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையாகக் கையுதிர்க்கவுள்ள தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் இலாபஞ்சாரா ஒழுங்கமைப்பாக விருத்தல்.

**12**. கூட்டுத்தாபனம் இலாபஞ்சாரா ஒழுங்கமைப்பாக விருத்தல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்தின் ஈட்டுகை கள், இலாபங்கள் அல்லது பங்கிலாபங்கள் எவையேனுமிருப்பின் அவற்றின் பாகமெதுவும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களி டையே பகிர்ந்தளிக்கப்படுதலுமாகாது.

கலைப்பின் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.

**13**. (அ) கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மீது அதன் தனிசுகள், பொறுப்புக்கள் என்பன எல்லாவற்றையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது ; ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களை யுடையதும் அல்லது குறிக்கோள்களையுடையனவும், அதன் அல்லது அவற்றின் விதிகளினால் ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர் களிடையே பகிர்ந்தளிப்பதிலிருந்து தடைசெய்யப்பட்டதும் அல்லது தடைசெய்யப்பட்டனவுமான வேறேதேனும் நிறுவனத் துக்கு அல்லது வேறெவையேனும் நிறுவனங்களுக்குக் கொடுக்கப் படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) வின் நோக்கங்களுக்காக, தோதான நிறுவனம் அல்லது நிறுவனங்கள், கலைக்கப்படுவதற்கு நேர்முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**14.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுக் குழுவினது இரு உறுப்பினர்களது முன்னிலையிலன்றி எத்தன்மையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடலும் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனுமாள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**15.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசினது உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**16.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்